தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ஏ. சோமசுந்தரம் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 15-10-2016

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் 37வது பட்டமளிப்பு விழா**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் 37வது பட்டமளிப்பு விழா இன்று (15-10-2016) பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா அரங்கில் நடைபெற்றது. மேதகு ஆளுநர் திரு. வித்யாசாகர் ராவ் அவர்கள் விழாவினை துவக்கி வைத்தார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் கு. இராமசாமி அவர்கள் துவக்க உரையாற்றினார். விழாவிற்கு வருகை தந்த அறிஞர்கள், பல்கலைக்கழகத்தின் மேலாண்மைக் குழு உறுப்பினர்கள், கல்வி குழு உறுப்பினர்கள், சிறப்பு விருந்தினர்கள், கௌரவ முனைவர் பட்டம் பெறும் பட்டதாரிகள், பெற்றோர்கள் மற்றும் ஊடக நண்பர்கள் ஆகியோரை வரவேற்றார்.

மேதகு ஆளுநர் அவர்கள் 37வது பட்டமளிப்பு விழாவினை துவக்கி வைத்து காந்திநகர் குஜராத் மேம்படுத்தப்பட்ட ஆராய்ச்சி மைய (institute of Advanced Research) பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் கு.ந. மகேசன் அவர்களை வரவேற்றார். கௌரவ முனைவர் பட்டம் பெறும் தேசிய வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு வங்கி (NABARD) தலைவர் முனைவர். ஹர்ஷ் குமார் பன்வாலா மற்றும் கனடா மானிடோபா பல்கலைக்கழக பன்னாட்டு ஆராய்ச்சி துணைவேந்தர் முனைவர் திக்வீர் எஸ். ஜெயாஸ் ஆகியோர்களுக்கு கௌரவ முனைவர் பட்டத்தை வழங்கினார்.

முனைவர் ஹர்ஷ் குமார் பன்வாலா மற்றும் முனைவர் திக்வீர் எஸ். ஜெயாஸ் அவர்களது உரையில் கௌரவ முனைவர் பட்டம் அளித்தற்கு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு நன்றி தெரிவித்தனர். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்துடனான தங்களின் ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க பணிகளில் கூட்டு முயற்சி திட்டங்களை செயல்படுத்துதல் பற்றி எடுத்துரைத்தனர்.

முனைவர் கு.ந. மகேசன் அவர்களது உரையில், மண்வள மேலாண்மை மற்றும் இயற்கை விவசாயத்தின் முக்கியத்துவத்தை விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கு உறுதுணையாக இருக்கும் என்று எடுத்துரைத்தார்.

மேதகு ஆளுநர் அவர்கள் முனைவர், முதுகலை மற்றும் இளமறிவியல் மாணவர்களுக்கு பட்டம் மற்றும் விருதுகளை வழங்கினார்.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் மற்றும் பல்கலைக்கழக இணைவேந்தர் திரு. ரா. துரைக்கண்ணு அவர்கள் தனது உரையில், வேளாண்மைக் கல்வி மற்றும் ஆராய்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் 2011-16 வரையிலான ஐந்து ஆண்டுகளில் ரூபாய் 1429 கோடி தமிழக அரசு ஒதுக்கீடு செய்ததாக தெரிவித்தார். மேலும் எட்டு புதிய விருதுகளுக்கான அறநல்கைகளை அறிவித்தார்.

1. பொன் விழா 1966 ஆம் ஆண்டு இளமறிவியல் (வேளாண்மை) உலக மண்ணியல் ஆண்டு 2015 நினைவு விருது
2. முனைவர் நஞ்சா அஜ்ஜன் விருது
3. டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல்கலாம் விருது
4. முனைவர் எஸ். நீலகண்டன் மற்றும் துமுலா குடும்ப விருது
5. பேராசிரியர் எஸ். சுந்தரராஜன் மற்றும் குடும்ப விருது
6. ஸ்மார்ட் கிள்ளிஸ் விருது
7. ரெட்போர்ட் சாரிடபிள் டிரஸ்ட் விருது
8. திருத்தணி கந்தசாமி தேவ சுந்தரம் விருது

இவ்விழாவில் பட்டம் பெற்ற 1869 மாணவர்களும், பல்கலைக்கழகத்தின் பேராசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் வானொலி தொலைக்காட்சி உள்ளிட்ட ஊடக நண்பர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மக்கள் தொடர்பு அலுவலர்